## அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை - 18

## முதலாமாண்டு இளங்கலை, அறிவியல், வணிகவியல்

## பகுதி - I. தமிழ்ப்பாடத் திட்டம் [2018 - 2021]

## முதல் பருவம் - தமிழ் - தாள் - I - 18TAM11L

## அலகு : V. படைப்பாற்றல்

1. கோட்பாட்டுத் தொடர்கள்

(அ) முழக்கங்கள் அமைத்தல் : சுற்றுச் சூழல், சுகாதாரம், சாலை விதிகள், மனித உரிமைகள் பாதுகாப்பு, விளம்பர வாசகங்கள், பேரிடர் மேலாண்மை.

(ஆ) புதுமொழிகள் அமைத்தல் :

பழைய பழமொழிகளைச் சூழல் (அ) துறைகளுக்கு ஏற்ற வகையில் புதுமையான மொழிகளாக அமைத்தல்.

2. பழைய கதை இலக்கிய நிகழ்வுகளை நீக்கி, அறம் புலப்படும்படி

(அ) மறு ஆக்கம் செய்தல்.

1. புராணக் கதை நிகழ்வுகள்
2. காப்பியக் கதை நிகழ்வுகள்
3. சங்க இலக்கிய நிகழ்வுகள்.

(ஆ) மொழி பெயர்ப்பு - பொது நிலை.

# அலகு - V

## படைப்பாற்றல்

### 1. கோட்பாட்டுத் தொடர்கள் :

1. "பணிவே உயர்வு
செருக்கே தாழ்வு"

2. "உரைத்தால் துன்பம் பாதி
பகிர்ந்தால் இன்பம் மீதி"

### (அ) முழக்கங்கள் அமைத்தல் :

சாலை விதிகள் :

1. "தலைக் கவசம், உங்கள் உயிர் கவசம்"
2. "சிவப்பு விளக்கை மீறாதே
சிவப்புக் குருதியைச் சிந்தாதே"

மழைநீர் சேகரிப்பு :

1. "மழைநீர் உயிர் நீர்"

### (ஆ) புதுமொழிகள் அமைத்தல் :

பழைய பழமொழிகளைச் சூழல் (அ) துறைகளுக்கு ஏற்ற வகையில் புதுமையான மொழிகளாக அமைக்க வேண்டும்.

(எ-கா) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - பழமொழி
செயலின் அழகு வினையில் தெரியும் - புதுமொழி

## வினாக்கள்

I. பின்வரும் வினாக்களுக்கு விடையளி : [30 சொற்கள்]

1. கோட்பாட்டுத் தொடரை உருவாக்கு - 'இரத்த தானம்'
2. முழக்கத் தொடர் எழுதுக - "சாலை விதிகள்"
3. "குழந்தை தொழிலாளர்" - என்ற தலைப்பில் முழக்கம் அமைக்க.
4. பழைய பழமொழிகளுக்கு ஏற்ப புதுமொழி கூறு.
5. கோட்பாட்டுத் தொடர் புனைக. 'முயற்சி'

II. பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளி:

6. முழக்கங்கள் அமைக்க : "நீர் சேமிப்பு"

7. கோட்பாட்டுத் தொடரை உருவாக்கு : "மழைநீர் சேகரிப்பு"

8. பழைய படிமொழிக்கு ஏற்ற புதுமொழி புனைக.

9. புது மொழி புனைக.

III. பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடையளி:

10. கோட்பாட்டுத் தொடரை உருவாக்குக. 1. சாலைப்பாதுகாப்பு.
2. வனப்பாதுகாப்பு 3. சுகாதாரம்.

2.(அ) பழைய கதை இலக்கிய நிகழ்வுகளை நீக்கி, அறம் புலப்படும்படி மறு ஆக்கம் செய்க.

"அகலிகையும் இராமனும்"

பழைய புராணக் கதை நிகழ்வு:

அகலிகை என்ற பெண் கௌதம முனிவர் சாபத்தினால் கல்லாக மாறி விடுகிறாள். "எப்பொழுது இராமன் வந்து கல்லை மிதிக்கின்றானோ அப்பொழுது பெண்ணாக [அகலிகை] மாறுவாய்." என்று முனிவர் சாப விமோசனமும் தருகிறார்.

ஒரு நாள் இராமன் காட்டிற்கு வருகிறான் கல்லை மிதிக்கின்றான். அப்பொழுது கல்லாக இருந்த அகலிகை மாறி இராமனிடம் தான் பெற்ற சாபத்தினை கூறி, சாப விமோசனம் அடைந்ததற்காக நன்றி கூறுகிறாள்.

மறு ஆக்கம்:

ஒரு நாள் இராமன் காட்டிற்கு வருகிறான், கல்லை இராமன் மிதிக்க முற்படும் பொழுது, கல்லாக இருக்கும் அகலிகை இராமனைப் பார்த்து, "மிதித்து விடாதீர்கள் இராமா, நான் கல்லாகவே இருந்து விடுகிறேன். ஏனென்றால் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள் [பெண்களை வஞ்சிக்கும் ஆண்கள்] இருக்கிறார்கள். அவர்களால் நான் மேலும் துன்பத்திற்கு ஆளாகிவிடுவேன். ஆதலால் நான்

பெண்ணாக மாறுவதை விட கல்லாக இருப்பதையே பாதுகாப்பாக எண்ணுகிறேன் என்கிறாள்.

முடிவு :

இன்றைய சூழலில் பெண்கள், பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் போக்கினைக் காணும் பொழுது, பெண்களை வெறும் போகப்பொருளாகப் பார்க்கும் ஆண்கள் இச்சமுதாயத்தில் அதிகம் உள்ளனர் என்பதை இக்கதை சுட்டுகிறது.

## வினாக்கள்

பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடைதருக:

1. தற்காலத்திற்கு ஏற்ப மறு ஆக்கம் செய்க – "கண்ணகியும் பாண்டியனும்".
2. இன்றைய சூழலுக்கு ஏற்ப மறு ஆக்கம் புனைக. "இராமன் – இராவணன்".
3. நீவிர் அறிந்த புராண / காப்பியக் கதை ஒன்றினை மறு ஆக்கம் செய்க.

## 3. (ஆ) மொழி பெயர்ப்பு – பொது நிலை.

ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட பகுதியினைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல் வேண்டும்.

[எ-கா]

"The great bronze statue was set upon a pedestal at the entrance to the harbour. Colossal and magnificent, it looked indeed like a God. It stood the height of twenty men and so great was its size that it could be seen for many miles across the sea."

**தமிழாக்கம் :**

" துறைமுக வாயிலில் ஒரு பெரும் பீடத்தின் மீது சிலை நிறுவப்பட்டது. சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அச்சிலை மெய்யாகவே கடவுளைப் போலத் தோன்றியது. இருபது ஆள் உயரத்திற்கு நின்ற அச்சிலை கடலில் பலகல் தொலைவிற்கு அப்பாலும் தெரிகின்ற அளவு பெரிதாக இருந்தது. "

## வினாக்கள்

**பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும் :**

1. பின்வரும் பகுதியினை தமிழில் மொழி பெயர்க்கவும்.

" Dr. Martin Luther King was one of the great men of the world. India honoured him with the Nehru Peace Prize. He fought for the civil rights of the black people in South Africa. He followed the teachings of Jesus christ and ideas of Mahatma Gandhi. "